சுகாதார வசதிகள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற தலைசிறந்த சைவ உணவகம்
*
மலாயன் கபே
யாழ்ப்பாணம்.
T'Phone: 22091

உதயன்

விலை ரூ-1/=

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

சுகாதார வசதிகள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற தலைசிறந்த சைவ உணவகம்
*
மலாயன் கபே
யாழ்ப்பாணம்.
T'Phone: 22091

கூடல்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆடு கார்த்திகை மீ 24 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ற.அவ்வல் பிறை 26 (09-12-1985) UTHAYAN – A LIVELY TAMIL DAILY கதிர்:- 13

★ இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வதற்கு

இந்திய இராணுவம் தலையிட வேண்டும்

ஹைதராபாத்தில் சந்திரகாசன் பேட்டி

ஹைதராபாத், டிச. 8

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்திய இராணுவம் தலையிட்டாக வேண்டும். — இவ்வாறு இனப் படுகொலையிலிருந்து ஈழத் தமிழ் மக்களை காப்பதற்கான இயக்கத்தின் தலைவர் திரு. செ. சந்திரகாசன் கேட்டுள்ளார்.

ஆந்திர மாநிலத்தின் தலைநகரமான ஹைதராபாத்தில் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றில் வைத்தே திரு. சந்திரகாசன் இப்படிக் கேட்டுக் கொண்டார்.

இலங்கைத் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவது குறித்து, இந்தியாவின் சகல மாநிலங்களும் பிரசாரம் செய்து, ஆதரவு திரட்டுமுகமாக திரு. சந்திரகாசன் மாநிலங்களுக்கு விஜயம் செய்து வருகிறார்.

தமிழ் நாட்டிலிருந்து முதலில் ஆந்திர மாநிலத்துக்கே அவர் பயணமானார். இனப் படுகொலையிலிருந்து ஈழத் தமிழ் மக்களை காப்பதற்கான இயக்கத்தின் (புரோரெக்) சார்பில் அங்கு செய்தியாளர்கள் மாநாடு நடத்தப்பட்டது. அதில் வைத்தே இந்திய இராணுவம் தலையிட்டு தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் எனக் கருத்து வெளியிட்டார்.

கடந்த ஆறு மாதங்களில் சுமார் 1500 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். தமிழர்களைக் கொல்ல பாகிஸ்தான், அமெரிக்கா, இஸ்ரவேல் போன்ற நாடுகள் ஆயுதம் கொடுத்து உதவி வருகின்றன.

ஆகையால் இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற இந்தியா தலையிடுவது நியாயமானது.

அவ்வாறு செய்யுமாறு மத்திய அரசை மாநில அரசுகள் பலவும் வலியுறுத்த வேண்டும்—

இந்தியா தலையிட்டால் இரண்டு மாதங்களில் இனப் பிரச்சினை தீர்த்துவிடும். — இவ்வாறு திரு. சந்திரகாசன் தெரிவித்தார்.

இனப்பிரச்சினை மோசமாகிறது

கோயம்புத்தூர், டிச. 9

இலங்கை இனப் பிரச்சினை மேலும் மோசமடைந்து வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி கோயம்புத்தூரில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

13-ஆம் திகதி

கண்காணிப்புக் குழு திருமலை வருகிறது

திருகோணமலை, டிச.9

கண்காணிப்பு குழுவினர் டிச 13,14,15 ஆம் திகதிகளில் திருகோணமலையில் தங்கியிருந்து, திருமலை பிரஜைகள் குழுவினரின்முறைப்பாடுகளை விசாரிப்பார்கள்.

தம்பலகமம், சம்பூர், கட்டைப்பறிச்சான், சேனையூர் பகுதிகளில் அப்பாவித்தமிழர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்று பிரஜைகள் குழுவால்கண்காணிப்புக் குழுவிற்கு முறையிடப் பட்டது.

அதைத் தொடர்ந்தே கண்காணிப்புக் குழு டிசம்பர் 13இல் திருமலை வருகிறது.

சுபநேரம்

9 - 12 - 1985

திங்கட்கிழமை

சுபநேரம்:

12–19 முதல் 1.49வரை

ராகுகாலம்:

7–49 முதல் 9-19வரை.

யாழ்ப்பாணத்துக்கு புதிய ஏ. எஸ். பி.

யாழ்ப்பாணம், டிச.9

உதவிப் பொலீஸ் அதிபர் ஜனுப். சவங்கன் யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் இதுவரை காலமும் கடமையாற்றி வந்த உதவிப் பொலீஸ் அதிபர் திரு தவலிங்கத்தின் இடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டார்.

திரு. தவலிங்கம் தெல்தெனிய பொலீஸ் நிலையத்துக்கு இடமாற்றப் பட்டுள்ளார்.

இந்திய மந்திரிக்கு இப்படி ஓர் ஆவல்!

டாக்கா, டிச.8

இலங்கைக்கு விஜயம் செய்ய மிகவும் ஆவலுடன் இருப்பதாக இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு.பி.ஆர். பகத் சொன்னார்.

இலங்கை வெளிநாட்டு அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் விடுத்த அழைப்பிற்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்ட கருத்தை திரு. பகத் வெளியிட்டார்.

'சார்க்' உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக முன்னரே டாக்கா போய்ச் சேர்ந்த இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஹமீத் இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பகத்தைச் சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்தும் பேசினார்.

ஜீப் அபகரிப்பு

யாழ்ப்பாணம், டிச 9

யாழ்ப்பாணம் அம்மன் வீதியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த பழுதடைந்த ஜீப் ஒன்றை இனந்தெரியாத நபர்கள் கடத்திச் சென்றுவிட்டனர்.

ஆயுதங்களுடன் இவர்கள் வான் ஒன்றில் வந்து, இந்த ஜீப்பை கட்டி இழுத்துச் சென்றனர்.

திருமலையில் 50 சதவீத பரீட்சார்த்திகள்

திருமலை, டிச 9

ஜீ. சி. ச. பரீட்சைகள் திருகோணமலை மாவட்டத்தில் ஆரம்பமாகின. 50 சதவீதமான பரீட்சார்த்திகளே பரீட்சைக்குச் சமுகமளித்தனர்.

வேறு அசம்பாவிதங்கள் எதுவும் இடம் பெறவில்லை.

83 தமிழ் இளைஞர் திருமலையில் விடுதலை

திருகோணமலை, டிச.9

திருகோணமலையைச் சேர்ந்த 83 தமிழ் இளைஞர்கள் ஞாயிறு காலை விடுதலை செய்யப்பட்டனர்.

தேடுதலின்போதுஇந்த இளைஞர்கள் உப்புவெளி புல்மோட்டை, திருமலை, குச்சவெளி பகுதிகளில் கைதாகினர்.

திருகோணமலை பிரஜைகள் குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க இவர்களை பாதுகாப்பு அமைச்சு விடுதலை செய்தது.

திருமலைரேதேச உதவி அரசாங்க அதிபர் திரு. வி. சிவலிங்கம், விடுதலையான இளைஞர்களை அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைத்தார்.

"செத்துப்போன" தொலைபேசிகளுக்கு இப்போதைக்கு உயிர்வராது

யாழ்ப்பாணம். டிச. 9

உங்கள் தொலைபேசி பழுதடைந்துள்ளதா? இன்னும் சில காலத்திற்கு அது திருத்தப்படாத நிலை ஏற்பட்டுள்ளது.

காரணம் தொலைபேசி உதிரிப்பாகங்கள், நிலத்திற்கு அடியில் போடப்படும் கேபிள்கள் முதலிய பொருள்களைப் பெற கொழும்புக்குச் சென்ற யாழ். மாவட்டத் தொலைத்தொடர்பு உயர் அதிகாரிகளும் களஞ்சியப் பொறுப்பாளரும் வெறுங் கையுடன் யாழ் நகர் திரும்பியுள்ளனர்.

இப் பொருள்களைக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்கு போதிய பாதுகாப்பு இல்லாதபடியால் பொருள்களைத் தரமுடியாது என்று கொழும்பு அதிகாரிகள் கூறிவிட்டனராம்.

இதனை அடுத்தே யாழ். அதிகாரிகள் வெறுங் கையுடன் திரும்பினர்.

ஆகவே, "செத்துப்போன" பல தொலைபேசிகளுக்கு சில காலத்துக்கு 'உயிர்' வராது.

முச்சந்திமுரளி

தீக்கோழிபடகில் ராஜீவிட்ட சமாளிச்சிட்டால் நிலத்துக்குள்ளே தலையை வைச்ச தீக்கோழி மாதிரி இஞ்ச நடக்கிற அட்டூழியங்களை மறைச்சுப் போடலாம் எண்டயோசனை போலை!

தீ விபத்து

சென்னையில் மீனவர் வாழும் பகுதி ஒன்றில் ஞாயிறு தீ விபத்து ஏற்பட்டது.

இதில் 400 வீடுகள் தீக்கிரையாகின.

இறந்தவர் ஒரு முதியவர். இன்னொருவர் காயமடைந்தார்.

ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் சேதமடைந்தன.

இறந்தவரின் குடும்பத்துக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியில் இருந்து 2,000 ரூபா வழங்கப்பட்டது.

தீக்கோழிப் படகில் அடுத்தடுத்த அறை

இருந்து ராஜீவ் - ஜே.ஆர் பேச்சு

டாக்கா, டிச. 9

இலங்கை இனப் பிரச்சினையைப் பற்றி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் படகுப் பிரயாணத்தின் போது மனம் விட்டுப் பேசினார்கள்.

அவர்கள் பிரயாணஞ் செய்த படகின் பெயர் 'ஒஸ்றிச்'. தீக்கோழியை 'ஒஸ்றிச்' என்று ஆங்கிலத்தில் அழைப்பர்.

இப்படகு பங்களாதேஷ் கடற்படைக்குச் சொந்தமானது. இப்படகில் அருகருகே இருக்கக் கூடியதாக இரண்டு அறைகளை ஒதுக்கித்தரும்படி ராஜீவும் ஜெயவர்த்தனவும் கேட்டு இருந்தனர்.

அதன்படி இரண்டு பேருக்கும் அருகருகே அறைகள் கொடுக்கப்பட்டு இருந்தன.

ஏனைய 5 நாடுகளின் தலைவர்களும் இப்படகில் பிரயாணஞ் செய்து தமது இரு தரப்பு விஷயங்கள் குறித்தும் பேசினர்.

சிக்கலான பிரச்சினைகளுக்கு அமைதியான தீர்வு காணுமுகமாகவே இந்தப் படகுப் பிரயாணம் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது.

மாநாட்டுக்குப் பின்னர் புகைப் படம் எடுக்கப்பட்டபோதும்,மற்றும் உபசார நிலைபவங்களின் போதும் திரு. ராஜீவும் திரு. ஜே. ஆரும் ஒருவருக்கு மற்றவர் அருகருகே குதூகலமாகக் காணப்பட்டனர்.

டாக்கா மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி பேசுகையில், இந்திய உபகண்டத்தின் தலைமைப் பதவியை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கே வழங்க வேண்டும் —

ஒற்றுமையான நாடுகளின் நம்பிக்கையை அவர் சொல்லாலும் செயலாலும் பெறவேண்டும்.— என்று குறிப்பிட்டார்.

ஒரு நாட்டின் விவகாரத்தில் மற்றது தலையிடாது

டாக்கா மாநாட்டில் தீர்மானம்

டாக்கா, டிச. 8

ஒரு நாட்டின் விவகாரத்தில் இன்னொரு நாடு தலையிடுவதில்லை. இலங்கை, இந்தியா உள்ளிட்ட தெற்காசிய நாடுகள் இப்படித் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றன.

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு சங்கம் நேற்று டாக்காவில் முறைப்படி ஸ்தாபிக்கப் பட்டது. அதனை ஒட்டி பிரகடனம் ஒன்றும் வெளியிடப்பட்டது.

இந்தப் பிரகடனத்திலேயே மேற்படி தீர்மானம் சேர்க்கப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, நேபாளம், பூட்டான், மாலைதீவு, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் இத்தப் பிரகடனத்தில் கையெழுத்திட்டார்கள்.

ஒரு நாட்டின் ஆட்சி யுரிமை, பிரதேச சமத்துவம், ஒருமைப்பாடு, தேசிய சுதந்திரம் ஆகியவற்றை ஏனைய அங்கத்துவ நாடுகள் மதித்து நடப்பது என பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒவ்வொரு நாடும் தத்தமது அரசியல், பொருளாதார முறைமைகளுக்கும் கலாசார பாரம்பரியங்களுக்கும் உட்பட்டு தமக்குள்ளிருக்கும் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துக் கொள்வது என்ற தீர்மானமும் பிரகடனத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

தென்கிழக்காசிய நாடுகளில் பயங்கரவாதம், போதைவஸ்து பாவனை ஆகியவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளை ஆலோசிக்க வெளிநாட்டு அமைச்சர்கள் உடனடியாகக் கூடி ஆராய்வார்கள். இவ்வாறு மாநாட்டுப் பிரகடனம் வெளியிடப்பட்ட பின்னர் பங்களாதேஷ் ஜனாதிபதி ஜனாப் எர்சாட் தெரிவித்தார்.

வவுனியாவில் தேடுதல்

வவுனியா, டிச.9

வவுனியா மாவட்டத்தில் ஆயுதப் படையினர் நடைபவனியில் சென்று தேடுதல் வேலையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பில் டிரக் கடத்தல்

யாழ்ப்பாணம், டிச 9

மட்டக்களப்பில் டிரக் வண்டி ஒன்று கடத்தப் பட்டது.

260 உரப்பைகள், 2500 ரூபா ஆகியவற்றுடன் டிரக் வண்டியும் கடத்தப்பட்டது.

இராணுவம் வந்ததால் மக்கள் அல்லோலகல்லோலம்

யாழ். வீதிகளில் சைக்கிள்கள் சேதம்

நல்லூர், டிச.9

நேற்றுக்காலை ஏழு வாகனங்களில் கோட்டையிலிருந்து இராணுவத்தினர், வெளியேறியதால் யாழ்நகர் அல்லோலகல்லோலப்பட்டது.

நேற்றுக்காலை சுமார் பதினொரு மணியளவில் மணிக்கூட்டு வீதியால் நடைபவனியாகவும் வாகனங்களிலும் இராணுவத்தினர் வந்தனர்.

ஆஸ்பத்திரி வீதி வழியாக வந்து பின்னர் பலாலி நோக்கிச் சென்றனர் என்று தெரிய வருகிறது.

அவர்கள் தூரச்சென்ற பின்னர் ஆரியகுளத் தடியில் சைக்கிள் ஒன்று நொறுங்கிய நிலையில் கிடக்கக் காணப்பட்டது.

கடைகள் யாவும் இழுத்து மூடப்பட்டன. மக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினர்.

டாக்சிகளும், ஓட்டோக்களும், மினிவான்களும் கண்ட கண்டபாட்டிற்கு ஓடிச்சென்றன.

சில மணித்தியாலங்களின் பின் நகர் மீண்டும் வழமைக்குத் திரும்பியது.

பின்னர் மாலை 5 மணி அளவில் ஆயுதப்படையினர் நடை பவனியாகவும் கவச வாகனங்களிலும் பலாலி வீதி ஊடாக கோட்டைக்குத் திரும்பி வந்தனர். வழியில் கைவிடப்பட்ட சைக்கிள்களை கவசவாகனங்களால் நெரித்துக்கொண்டு வந்தனர்.

ஆயுதப்படையினர் திரும்பி வருகையில் ஹெலிக்கொப்டர் ஒன்று வானத்தில் தாழப்பறந்து சென்றது.

பரந்தனில் துப்பாக்கிச் சூடு

இளைஞர்கள் தப்பினர்; அப்பாவி ஒருவர் பலி

யாழ்ப்பாணம், டிச. 9

பரந்தனில் வீதியால் சென்று கொண்டிருந்த ஒருவர் துப்பாக்கிச் சூடு பட்டு மரணமானார்.

வேறு இரண்டு பேர் காயமடைந்தனர்.

ஞாயிறு காலை (8-12-85) இச்சம்பவம் நடைபெற்றது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:—

ஞாயிறு காலை பரந்தன் வீதியால் ஆயுதப் படையினர் ரோந்து வந்து கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிள் ஒன்று எதிர்ப்பட்டது.

அதில் இரண்டு இளைஞர்கள் வந்து கொண்டு இருந்தனர்.

ஆயுதப் படையினரைக் கண்டதும் இளைஞர்கள் மோட்டார் சைக்கிளை அப்படியே போட்டு விட்டு ஓடி விட்டனர்.

ஆயுதப் வீதியால் சுட்டதில் வந்து கொண்டு இருந்த ஒரு தமிழர் மரணம் அடைந்தார். வேறு இரு தமிழர்கள் காயமடைந்தனர்.

ஆயுதப் படையினர் மோட்டார் சைக்கிளைக் கைப்பற்றிச் சென்றனர். 5 பேரை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

நாவற்குழி வாசி சம்மாந்துறையில் கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், டிச. 9

நாவற்குழி வாசி, சம்மாந்துறையில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டார்.

ஞாயிறு(8-12-85) காலை இச் சம்பவம் ஊடம்பெற்றது.

கடத்தப்பட்ட நாவற்குழிவாசி தமிழர்.

கல்முனை கட்டடத் திணைக்களத்தில் தொழிலாட்டப் அதிகாரி யாகப் பணியாற்றி வந்தார்.

ஞாயிறு காலை சம்மாந்துறையில் வீதியால்வந்து கொண்டிருக்கையில் இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டார்.

இறந்தவரின் சடலம் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த இரண்டு பேரும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நெல் களஞ்சியம் கொள்ளை

யாழ்ப்பாணம், டிச.9

அம்பாறை மாவட்டத்தில் சவளக்கடை என்னும் இடத்தில் உள்ள நெல் களஞ்சியம் ஒன்று இனந்தெரியாத நபர்களினால் கொள்ளையிடப்பட்டது.

1 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டன.

20 பேர் ஆயுதங்களுடன் புகுந்து கொள்ளை அடித்தனர்.

அணு ஆயுதப் போட்டி வளரும் நாடுகளுக்கு அச்சுறுத்தல்

'சார்க்' உச்சி மாநாட்டில் பிரதமர் ராஜீவ் தெரிவிப்பு

டாக்கா, டிச. 8

"வல்லரசுகளின் அணு ஆயுதப் போட்டி வளரும் நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது."

இப்படி "சார்க்" உச்சி மாநாட்டில் பேசுகையில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி குறிப்பிட்டார்.

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புச் சங்க உச்சி மாநாடு தொடர்ந்து நடந்தபோது சில தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தீவிரவாதத்தின் சகல அம்சங்களையும் விசாரணை செய்ய உயர் கமிட்டி ஒன்றை அமைப்பது,

போதை வஸ்து சம்பந்தமாக ஆராய உயர் கமிட்டி ஒன்றை அமைப்பது- இத்தீர்மானங்களை உச்சி மாநாட்டுத் தலைவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

வெளிநாட்டமைச்சர்கள் மத்தியில் இத்தீர்மானங்கள் முன்னர் பரிசீலனை செய்யப்பட்டன.

விதவைகளுக்கு தமிழ் நாட்டில் கைத்தொழிற் பயிற்சி

நாகர்கோவில், டிச 8

இராணுவ அத்துமீறல் காரணமாக ஏற்பட்ட துயரங்களிற் குட்டினால் உயிர்த்த குடும்பங்களுக்கு பருத்தித்துறை பிரஜைகள் குழு உதவ முன்வந்துள்ளது.

இக் குடும்பங்களின் விதவைகளுள் ஐவர் தெரிவு செய்யப்பட்டு தமிழ் நாட்டிலுள்ள சிறு கைத்தொழில் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

அவர்களுக்கு அங்கு கைத்தொழிற் பயிற்சி வழங்கப்படும்.

ரஜ்னீஷ் சுவாமியின் உதவியாளர் ஷீலா நாடு கடத்தப்படலாம்

லண்டன் டிச 8

ரஜ்னீஷ் சுவாமியாரின் முன்னாள் உதவியாளரான ஆனந்த் ஷீலா என்ற பெண்ணை மேற்கு ஜெர்மனியில் இருந்து நாடு கடத்தும் படி அமெரிக்கா கேட்டுள்ளது.

அமெரிக்காவில் இருந்த ரஜ்னீஷ்புரம் ஆச்சிரமத்தில் வைத்து, ரஜ்னீஷின் டாக்டரைக் கொலை செய்ய முயற்சித்தவர் என்று ஷீலா மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

மேற்கு ஜெர்மனியில் உள்ள சிறை ஒன்றில் ஷீலா தற்பொழுது காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

குஜராத்தில் வன்செயல்கள்

அகமதாபாத் டிச. 8

குஜராத் மாநிலத்தில் மீண்டும் வன்செயல்கள் வெடித்தன.

பிற்பட்டவர்களுக்குப் பாடசாலைகளில் இடம் ஒதுக்கிடும் புதிய சட்டம் தொடர்பாகவே இந்த வன்செயல்கள் வெடித்தன.

இந்த வன்செயல்களின் போது இரண்டு பஸ்கள் எரிக்கப்பட்டன.

இடம் ஒதுக்கலுக்கு எதிரான குழு, மாநிலம் முழுவதும் உள்ள பாடசாலைகள், கல்லூரிகளை வேலை நிறுத்தத்தில் ஈடுபடும்படி கேட்டுள்ளது.

வெளிநாட்டவருக்கு எய்ட்ஸ் நோய்

டுபாய் டிச. 8

டுபாய் நாட்டில் வேலை செய்யும் வெளிநாட்டு தொழிலாளர்களை 'எய்ட்ஸ்' நோய் பீடித்துள்ளதா?

இது சம்பந்தமான பரிசோதனைகளை டுபாயில் உள்ள முனிசிப்பல் நிர்வாகம் ஆரம்பித்துள்ளன.

வெளி உலகம்

பரசூட் மூலம் எதிரி 30 தடவை குதிப்பார் வெலிங்டனில் புதிய தண்டனை

வெலிங்டன் டிச 8

அளவுக்குமீறிக் குடிக்கின்றீரா?

30 முறை பரசூட்டில் இருந்து குதிக்கும்படி ஒருவருக்கு நீதிபதி உத்தரவு இட்டார். நியூசிலாந்து நாட்டில் இது இடம்பெற்றது.

கார்கள் களவு எடுத்ததாக இம்பிட்செல் (வயது27) என்பவர் குற்றஞ் சாட்டப்பட்டார்.

இவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வாதாடுகையில்

"எதிரி நன்றாகக் குடிப்பார். குடியால் தன்னையே அழித்துவருகின்றார். பரசூட்டிலிருந்து குதிப்பதை அமெச்சூர் தொழிலாகக் கொண்டிருக்கின்றார்" என்று சொன்னார்.

இதைக் கேட்ட நீதிபதி வில்லியம் மிட்செல் (எதிரிக்கு உறவினர் அல்ல) தண்டனை வழங்கும் முன்னர் கூறியதாவது:

"எதிரியை தொந்தரவில் இருந்து நீக்கிவைப்பதற்கு ஆகாயத்தில் மிதப்பதுதான் நல்லது. இப்படிச் சொன்ன நீதிபதி, 30 முறை பரசூட்டில் இருந்து குதிக்கும்படி உத்தரவு இட்டார்.

ஆனால் எதிரி ஒரு பரசூட் குதிப்புக்கு 11 அமெரிக்க டாலர்கள் பெறுமதியான வேலைகளைச் செய்து கழித்துக்கொள்வார்.

18 ஆம் நூற்றாண்டு வைனின் விலை 1, 55, 000 டாலர்

லண்டன் டிச.8

18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு போத்தல் வைன் 1 லட்சத்து 55 ஆயிரம் டாலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இது ஒரு உலக சாதனை என்று அறிவிக்கப்பட்டது.

இந்த வைனை 18 ஆம் நூற்றாண்டில் அமெரிக்கத் தூதராக பாரிஸில் இருந்த தோமஸ் ஜெபர்ஸன் வாங்கினார்.

இந்த ஜெபர்ஸன் தான் அமெரிக்காவின் மூன்றாவதுஜனாதிபதியாக 1801 முதல் 1809 வரை பதவி வகித்தார்.

வைன் போத்தலில் இன்னும் ஜெபர்ஸனின் கையெழுத்து உள்ளது.

பிரஞ்சுப்புரட்சிக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த வைன், போத்தலில் அடைக்கப்பட்டது.

மின்சாரத்துக்கு ஒருவர் பலி

வவுனியா, டிச.9

மின்சாரம் தாக்கி 20 வயது இளைஞன் மரணமானார்.

வவுனியாவில் சூசையப்பர் குளம் என்னுமிடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அல்வின்என்று அழைக்கப்படும் அந்தோனிப் பிள்ளை எல்வின் என்பவரே இறந்தவர் ஆவார்.

வன்செயலில் எரித்து போன வீடு ஒன்றில் இருந்து சில பொருள்களை அகற்றும்சமயத்தில்தான் இறந்தவரை மின்சாரம் தாக்கியது என்று தெரிய வந்துள்ளது.

இறந்தவரின் சடலம் வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

சிலுக்கின் 'இமேஜ்' எப்படி இருக்கிறது?

சினிமா ரசிகர்களின் கனவுக் கன்னியான சிலுக்கின் "சகாப்தம்" முடிந்து விட்டதாக பட உலகில் பரவலாகக் கதை அடிபட்டது.

தமிழ்த் திரையுலகையே ஆக்கிரமித்துக் கொண்டிருந்த சிலுக்கு யுக்கா இந்தக் கதி.

இதுபற்றி சிலுக்கிடமே கேட்கப்பட்டது.

அவர் புன்முறுவலுடன் சொன்னார்:

நான் நானாகத் தான் இருக்கிறேன். அன்றும் சரி, இன்றும் சரி ஒப்பனை இல்லாமல் நடித்துக் கொண்டிருக்கிறேன். 5-10 படங்களில் விரைய படங்கள் இல்லை என்பது உண்மை.

ஆனால், சிலுக்கு வீட்டுக்கு படுத்துத்தூங்குகிறார் என்று பேசுவதெல்லாம் பொய்.

தெலுங்குப் படங்களில் "லிலி" யாக இருக்கிறேன். அசோக்குமார், நாராயணராவ் போன்றமுன்னணி டைரக்டர்களின்படங்களில் நடித்து வருகிறேன். எல்லாமாக மொத்தம் இருபது படங்களுக்கு மேல் நடித்துக் கொண்டிருக்கிறேன்.

இதைவிட தமிழ்ப் படங்களிலும் நடித்துக் கொண்டுதான் இருக்கிறேன் ரசிகர்களிடம் என்னுடைய "இமேஜ்" சற்றும் குறையவில்லை எனக்குவரும் கடிதங்கள் இதை நிரூபிக்கின்றன.

சினிமா உலகில் பொறுது போகாத சிலர் பொய்ப்பும் வதந்தி தான் இது. என்னைப் பொறுத்தவரையில் நடிப்புக்கு மொழி தேவையில்லை. என்ன மொழிப் படமானாலும் நடிப்பு ஒன்று தான்.

நான் சந்தோஷமாகத் தான் இருக்கிறேன். ரசிகர்கள் புறக்கணிக்கு மளவு என்னிடம் இளமை குலாறுகிறது போகவில்லை. நடிக்கும் திறமையும் மங்கவில்லை.

இப்படி சிலுக்கு சுமிதா கூறினார்.

கொலை, நாசவேலை சதிமுயற்சி அம்பலம்

இந்திய புலனாய்வு அதிகாரிகள் கண்டுபிடிப்பு

புதுடில்லி டிச. 8

இந்திய மத்திய அமைச்சர் ஒருவரைக் கொல்வும் ரயில்களைத் தகர்க்கவும் மேற்கொள்ளப்பட்ட சதிமுயற்சி ஒன்று அம்பலமானதாக அறிவிக்கப்பட்டது.

'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' நாளிதழ் வெளியிட்ட செய்தி ஒன்றில், இச் சதியை இந்திய புலனாய்வு அதிகாரிகள் கண்டுபிடித்ததாகக்கூறப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து பஞ்சாப், ஹரியானா, காஷ்மீர், புதுடில்லி மாநிலங்களில்பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இச் சதி முயற்சிக்குப் பின்னால் சீக்கிய தீவிரவாதிகளின் தொடர்பு இருப்பதாகவும் அப்பத்திரிகைச் செய்தி கூறுகின்றது.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

மனித உரிமைகள் தினம்

துக்க தினம்

தமிழ் மகளிர் அவை அறிக்கை

யாழ்ப்பாணம், டிச. 9

மனித உரிமைகள் தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டிக்க தமிழ் மகளிர் அவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ் மகளிர் அவை விடுத்த அறிக்கை வருமாறு:-

ஆண்டுதோறும் டிசம்பர் 10, மனித உரிமைகள் தினமாக ஐக்கிய நாடுகள் சபையில் பிரகடனப்படுத்தப் பட்டு உள்ளது.

ஸ்ரீலங்கா இனவாத அரசும்இந்நாளைக்கொண்டாடப்பேர்கிறது. தமிழ் பேசும் மக்கள்மீது நாகரிகத்திற்கு அப்பாற்பட்ட காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகளை அரசு கையாளுகின்றது. பின்னர் மனித உரிமைகள் பற்றிப் பேசுவது வியப்புக்கு உரியது

எமது உடைமை, உயிர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத இக்காலத்தில் மனித உரிமைகள் தினத்தைத் துக்கமான கரிநாளாகக்கொண்டாடுவதே பொருத்தமானது என்று தமிழ் மகளிர் அவை கருதுகின்றது.

எனவே டிசம்பர் 10இல் அமைதியாக அடக்கமாக பொதுமக்களைப் பாதிக்காத முறையில் துக்க தினத்தைப் பயனுள்ள முறையில் அனுஷ்டிக்கும்படி சகல அமைப்புக்களையும் தமிழ் மகளிர் அவை கேட்டுக் கொள்ளுகின்றது. இப்படி அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

குப்பிவிளக்கு யமனாகியது

யாழ்ப்பாணம், டிச 9

குப்பி விளக்கு,7மாதக் குழந்தைக்கு யமனாகியது.

நெடுங்கேணியைச் சேர்ந்த குழந்தையின் பெயர் இராமசாமி செல்வராணி.

குப்பி விளக்கு சரிந்ததினால் குழந்தையின் மீது தீப்பிடித்துக் கொண்டது.

தாய் நித்திரையில் இருக்கும் போது, குழந்தை எழும்பி தவழ்ந்து சென்ற போது குப்பி விளக்கு தவறு தலாக விழுந்து விட்டது என்று மரண விசாரணையில் வெளிவந்தது.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். பிரான்ஸிஸ் விபத்து மரணம் என்று தீர்ப்பளித்தார்.

வாழைச்சேனை கடுதாசி ஆலையில் கொள்ளை

யாழ்ப்பாணம், டிச. 9

வாழைச்சேனை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தில் இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி தியேனப்பு இயந்திரம் ஒன்றையும் இரு டிரக்டர்களையும் கொள்ளை அடித்துச் சென்றது.

வியாழன் இரவு இச் சம்பவம் நடந்தது.

தமது தேவை முடிந்ததும் வாகனங்களை நாம் மீண்டும் கொண்டு வந்து ஒப்படைப்பதாகக் கூறிவிட்டு அவர்கள் சென்றனர்.

அவர்களால் எடுத்துச் செல்லப்பட்ட தீயணைப்பு வாகனம் சேற்றில் புதையுண்ட நிலையில் வாகனேரிக்கும் காவத்தமுனைக்கும் இடையில் வெள்ளிக்கிழமை காலை கண்டு பிடிக்கப்பட்டது.

கிளிநொச்சி விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

விசுவமடு, டிச. 9

கழிவு வாய்க்கால்கள் மூடப்பட்டிருப்பதால் முாகமோட்டை, வெளிச்சண்டல், கண்டாவளைப் பெரியதோர் இழப்பு

யாழ்ப்பாணம், டிச 9

முன்னைநாள் நீதியரசரும், நாவலர் சபையின் தலைவருமாகிய, உயர்திரு வீரவாகு சிவசுப்பிரமணியம் மறைந்துவிட்டார். அவரது மறைவு சைவத்துக்குச் தமிழினத்துக்கும் பெரியதோர் இழப்பாகும்.

இவ்வாறு நாவலர் சபை ஆட்சிக்குமுவினர் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நேர்மை, நீதி, கருணை சரியெனப் பட்டதைச் செய்துமுடிக்கும் தன்மை ஆகிய நல்லியல்புகள் அவரிடம் இயல்பாக அமைந்திருந்தன. அத் தகைய பெரியாரை இழந்தது ஈடுசெய்ய முடியாத இழப்பே.

-இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

பகுதிகளிலுள்ள நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் விவசாயிகள் பல சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

தற்போது அடிக்கடி மழை பெய்து வருவதாலும், கடந்தமாதம் தொடர்ந்து பெய்தபெருமழை காரணமாக அழிந்த நெல்வயல்களை விவசாயிகள் விதைத்து வருவதாலும், நெல்வயல்களிலிருந்து தண்ணீரை வெளியே பாய்ச்ச வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

வயல்களிலிருந்து நீரைக் கடத்துவதற்கு பல கழிவு வாய்க்கால்கள் அமைந்திருந்தன. இவ் வாய்க்கால்களை, இவற்றின் அருகேயுள்ளவிவசாயிகள் அழித்து வயல்களாக்கி விவசாயம் செய்கின்றனர்.

இதன்காரணமாக பல விவசாயிகளின் நெல் வயல்களில் வெள்ளம் தேங்கி நின்று அறுவை ஏற்படுத்துவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தபால் பஸ் சேவை நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 9

தபால் பஸ் சேவை நடத்தும்படி வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவருக்கு மீண்டும் கேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி-பூநகரிக்கு தபால் பஸ்சேவை ஒன்று இல்லாததினால் மக்கள் படும் அவதிகள் பற்றியும் பூநகரி பிரஜைகள் குழுத்தலைவர் திரு.பொ. தங்கராசா வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பூநகரிப் பகுதியில் ஒரு உதவி அரசாங்க அதிபர் எட்டுக் கிராம சேவகர் பிரிவுகள், இரண்டு நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்கள், ஒரு பிரதம தபால் நிலையம், எட்டு உப தபால் நிலையங்கள் இரண்டு கமத்தொழில் சேவை நிலையங்கள், கூட்டுறவுச் சங்கம் பதினாறு கிளை நிலையங்கள், மூன்று உள்ளூராட்சி உப அலுவலகங்கள், நான்கு அரசினர் வைத்தியசாலைகள் 24 பாடசாலைகள் யாழ்ப் பூநகரி தபால் நிலையம் ஊடாகவே தபால் சேவையைப் பெற்று வந்தன.

இப்படியும் மகஜர் கட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கல்வி உலகை வளம் படுத்தும் பாரம்பரியத்தை யாழ் பல்கலைக்கழகம் ஆக்கித் தந்துள்ளது

கொக்குவில் டிச. 9

யாழ் பல்கலைக்கழகம் கல்வி உலகை வளம்படுத்தும் சிறந்த பாரம்பரியங்களை ஆக்கித் தந்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்வி புலன் பட்டப்படிப்பு மாணவர்களின் பிரியாவிடைவைபவம் அண்மையில் நடைபெற்றது.

பேராசிரியர் ப. சந்திரசேகரம் பேசும்போது மேற்கண்டவாறு சொன்னார்.

அவர்மேலும் சொன்னதாவது:

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கல்வி உலகை வளம்படுத்தும் சிறந்த பாரம்பரியங்களை ஆக்கித் தந்துள்ளது.

இருநூறுக்கும் மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்களும், கல்வி நிருவாகிகளும் நாகலமச் சான்றிதழ் பெற்றுள்ளனர்.

இருபத்தைந்து பேர் முதுமாணிப் பட்டத்தையும், ஒருவர் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

யாழ் பல்கலைக்கழக கல்விபுலத்தோடு அரசாங்கப் பாடசாலைகள் மாத்திரமின்றி தனியார் துறைப் பா. சாலைகளும் இணைந்து செயலாற்றி வருகின்றன.

தனியார் துறைப்பாடசாலைகள் தேசிய கல்வி அமைப்பின் கீழ் இயங்குதல் மிகவும் பொருத்தமானதாகும்.

இப்படி அவர் கூறினார்.

வைபவத்தில் விரிவுரையாளர்கள் வ. ஆறுமுகம், கலாநிதிசபா.ஜெயராசா, கலாநிதி கருணாநந்தன், க. சின்னத்தம்பி ஆகியோரும் பேசினார்கள்.

கடத்தல் வாகனம் திருப்பி ஒப்படைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச.9

பலமாதங்களுக்கு முன் கடத்தப்பட்ட தபால் விநியோகம் செய்யும் வாகனத்தைத் திருப்பித் தந்து உதவும்படி யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலைய அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

இந்த வாகனம் இல்லாதபடியால் யாழ். குடா நாட்டில் தபால் விநியோகத்தைச் சீராக நடத்த முடியாது இருப்பதாக தபால் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

வவுனியா நகர சபைக்கு ரூ. 10 லட்சம்

திருமலை-வவுனியா பஸ் சேவை ரத்து

திருகோணமலை,டிச. 9.

திருகோணமலை –வவுனியா பஸ் சேவைகள் மீண்டும் ரத்துச் செய்யப்பட்டன.

சில தினங்களுக்கு முன்னர் இச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

திருமலை வன்செயல்கள் தொடங்கிய காலத்திலும் இந்த பஸ் சேவை நடைபெறாமல் இருந்தது.

"பா" ஓதலில் முதலாம் இடம்

திருநெல்வேலி, டிச, 9

வதிரி. வடக்கு மெதடிஸ்தமிஷன் தமிழ் வித்தியாலய மாணவிசெல்வி லதாநிரி அம்பிகைபாலன் யாழ் மாவட்ட ஆங்கில இனப் போட்டியில் 3வும் வகுப்பு "பா" ஓதலில் முதலாம் இடத்தைப் பெற்றார்.

கோட்டை ரயில் நிலையத்தில் யாழ். பயணிகள் படும்பாடு

அம்பாறை, டிச9

யாழ்ப்பாணம் செல்லும் பிரயாணிகள் பயண டிக்கெட்டுகள் பெறுவதற்காகக் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் அடையும் இன்னல்கள் போக்குவரத்து அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகருமான திரு. கே. வேல்முருகு போக்குவரத்து அமைச்சர் ஜனப். எம். எச். முஹம்மதுவிற்கு இது குறித்து மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:

கோட்டை ரயில் நிலையத்தில் ஒரு கவுண்டரில் வைத்துத்தான் யாழ்ப்பாணம் செல்லும் பயணிகளுக்கு முன்முறுவது வகுப்பிற்கான பயண டிக்கெட்டுகள் வழங்கப்படுகின்றன.

வாரணங்களும் அதே கவுண்டரில் வைத்துத் தான் வழங்கப்படுகின்றன.

இதனால் இக்கவுண்டரின் முன்னால் நீண்ட கியூ வரிசை காணப்படுகின்றது.

ஒருவர் பயண டிக்கெட் பெற மூன்று, நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் செலவிட வேண்டியுள்ளது.

சில சமயம் பிரயாணிகள் பயண டிக்கட் பெறாமலேயே வீடு திரும்ப வேண்டியுள்ளது.

யாழ் பயணிகளின் நன்மை கருதி மேலதிக கவுண்டர்களைத் திறந்து சேவையாற்ற வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை எடுங்கள்.

இப்படி திரு. வேல்முருகு மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

உதய சங்கற்பம்

உண்மையான மனிதன் யாரையும் துவேஷிப்பது இல்லை.

- தெய்வீகியான -

உதயன்

உண்மை - அநீதியாமை - நடு நிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மிகைநாதீய வீதி, மாநகரசபை. 9-12-85

தொலை பேசி: 24805 22073 த.பெ. 28

தேவை ஏற்படின் படை அனுப்ப அதிகாரம்

தமிழ் -- முஸ்லிம் மக்கள் நல்லுறவுவலுக்க வேண்டும்

தமிழ் — முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமை வலுப்பெறவேண்டும், தமிழ் மக்களும் முஸ்லிம்களும் நீண்டகாலமாக எமது பிரதேசங்களில் இணைந்து வாழ்ந்து வருபவர்கள். நாம் இருசாராரும் உள்ளத் தூய்மையுடன் சமாதானத்தைப் பேணவேண்டும்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் உறுப்பினர் திரு. க. வேல்முருகு இவ்வாறு வலியுறுத்தியிருக்கிறார். அவரது கருத்தை எவரும் மறுத்துரைக்க முடியாது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில், தமிழ் மக்களுடன் சேர்ந்து வாழும் முஸ்லிம்களின் தாய்மொழி எல்லாவகையாலும் தமிழே. அவர்கள் பேசவது தமிழ். வீட்டுமொழி தமிழ். போதனுமொழி தமிழ். மதத்தால் மட்டுமே அவர்கள் இஸ்லாமியர்கள். எனவே அவர்களைத் தமிழ் மக்களிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. அவர்கள் எங்கள் சகோதரர்கள்,

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைக் கேட்கும்போதெல்லாம் நிங்கள் அரசுகள் இரு சமூகங்களுக்கிடையிலும் பிளவை உண்டாக்க முயற்சிக்கின்றன. வேண்டுமென்றே இல்லாமியப் பெருமக்களைத் தமிழர்களிடமிருந்து தனித்துக் காட்ட முயல்கின்றன. தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்குவதற்கு முஸ்லிம் மக்கள் குந்தகமாக இருப்பதாக புனைபடம் காட்டவும் முயல்கின்றன.

அண்மைக் காலங்களில் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்களை ஒருவருக்கொருவர் பகைமை கொள்ளச் செய்யும் திட்டத்துக்குச் செயல்வடிவம் கொடுக்கப்பட்டது. மூன்றாம் போர்வழிகள் இருவரையும் பிளவுபட வைத்தனர். அந்த மூன்றாவது போர்வழி அரசாங்கத்தின் ஆள்தான என்பதை முஸ்லிம் தலைவர்களும் பின்னர் உணர்ந்தனர், கண்டுபிடித்தனர்.

எனினும் இரு சமூகங்களிலும் உள்ள ஒரு சில புலனுருவிகளைப் பயன்படுத்தி அடிக்கடி தமிழ் — முஸ்லிம் மோதல்களை உண்டாக்கி வருகின்றது அரசு மறைமுகவாக சுக்தி. புலனுருவிகளைக் கண்டுபிடிக்க முடியாத படத்தில், தானே செய்துவிட்டு இருபக்கத்திலும் அடுத்தாராரே செய்ததாகக் கூறி மேலும் பகைமையை வளர்த்து வருகிறது.

எமது பகுதிகளில் வாழும் முஸ்லிம் தமிழ் மக்களிடையே காலத்துக்குக்காலம் மோதல் அல்லது கலவரம் என்ற தண்ணீரைச் சிறிது சிறிதாக ஊற்றி பகைமை என்ற பெருவிருட்சத்தை வளர்த்து விடுவதே அரசாங்கத்தின் நோக்கம். அபபடிச் செய்வதன்மூலம் பிரித்தாளும் பிரிட்டிஷ் தந்திரத்தைக் 'கொப்பி' அடிக்க முயல்கிறது அரசு.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் இந்தத் தந்திரத்தையும், சூழ்ச்சியையும் இனம் கண்டு கொள்ளவது அவசியம். தம்மை முட்டி மோத வைத்துப் பிளவுபடுத்த முயல்வோர் முகத்தில் அடித்தாற் போல், தமது உறவை இதுவரை இருந்ததைவிட மேலும் மேலும் இறுக்கிக் கொள்ள வேண்டும்.

ஒருவரை மற்றவர் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதை இரு சாராரும் தவிர்ப்பது பிரதானம். ஒருவருக்குள்ள உரிமைகளைப் பேணவும், மதிக்கவும் மற்றவர் உள்ளத் தூய்மையுடன் பணிபுரிய வேண்டும். ஏதாவது சிக்கல்கள் இருப்பின் இரு சாராரும் மனந்திறந்து பேசி நிரந்தரமான, நியாயான சமாதானத்தை உருவாக்குவது, இன்றைய கால கட்டத்தில் மிகவும் அவசரமானதும் அவசியமானதுமாகும்.

தமக்குச் சேரவேண்டிய உரிமைகளையும், சேர வேண்டிய பங்குகளையும் தமிழர்கள் பறித்து விடுவார்கள் என்ற சந்தேகம் முஸ்லிம் மக்களுக்கு எழக் கூடாது. அதற்கு ஏற்ற விதத்தில் தமிழ் தலைவர்களும், இயக்கங்களும் நடந்து கொள்ள வேண்டும். நடைமுறையில் செயலாற்ற வேண்டும். அப்போது தான் சிறுபான்மையினருக்குள் சிறுபான்மையினராக விளங்கும் முஸ்லிம்கள் மனநிறைவு கொள்ள முடியும்.

தமிழர்களும் முஸ்லிம்களும் உள்ளந்தரங்கம் எதுவும் இல்லாமல் தமக்கு வரக்கூடிய பிரச்சினைகளை வெளிப்படையாகப் பேசி நெட்டத் தெளிவான முடிவுக்கு வரவேண்டும்: அப்போது எந்த சக்தியாலும் அவர்களை எப்போதும் பிரிக்க முடியாது.

அரசாங்க நகல்திட்ட யோசனையில் இதற்கு வகை உண்டு

பகுதி 4

மகாவலி அபிவிருத்தித் திட்டம்

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் ஏ, பி, சி, டி, ஜி, எச் பிரிவுகளை அடக்கியது. ஐ, ஜே, கே, எல், எம் பிரிவுகளின் அபிவிருத்திபற்றி இன்னும் பரிசீலனை செய்யப்படவில்லை.

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் முடிவடைந்தபின்னர் தான் இதுபற்றி ஆராயப்படும்.

'பி' திட்டத்தின் கீழ் தமிழ் பேசும் மக்கள், தேசிய இன விகிதாசார அடிப்படையில் தான், மட்டக்களப்பு மாவட்டத்தில் மாதுறுஓயாவின் வடகரைப் பக்கமும் இடதுகரைப் பக்கமும் குடியமர்த்தப் படலாம்.

தேசிய இனவிகிதாசார அடிப்படையில் தான் தமிழ் பேசும் மக்களுக்குக் காணி உரிமை கிடைக்கும்.

பொலீஸ் படையில் உள்ள எவரும் நாட்டில் உள்ள எந்தப் பொலீஸ் நிலையத்தாகும இடமாற்றம் செய்யப்படுவார். ஸ். ஐ. டி. பொலீஸ் பிரிவு போன்ற விச்சேட பொலீஸ் பிரிவுகளில் பணியாற்றுபவர்களுக்கும் இந்தமாதிரி இடமாற்றம் உண்டு.

ஒரு மாகாண சபை பிரதேசத்துல இருந்து இன்னொரு மாகாண சபைப பிரதேசத்திற்கு இடையில நடைபெறும பொலீஸார் இடமாற்றங்களபற்றி பொலீஸ் மாஅதிபர் தீர்மானிப்பார்.

மாகாணங்களில் கடமையாறறும பொலீஸாரை, விச்சட பரிவுப் பொலீஸ் படையில் சேர்த்துக்கொள்வது பற்றியும பொலீஸ் மாஅதிபர் தீர்மானிபபார்.

மாகாண சபை எல்லைகளுள இடமபெறும பொலீஸாரால இடமாற்றங்கள மாகாணப பொலீஸ் தலைமை அதகாரிகய, மாகாணசபை நிறைவேற்று அதகாரியுடன கலந்து ஆலோசன செயத பின்னர் தீர்மானிபபார்.

மாகாண சபை எல்லைக்குள் உளள பொலீஸ் நிலையங்களில் கடமை புரியும் பொலீஸார் அந்தந்தப பகுதி மக்களின மொழியில நன்குகப் பேசக்கூடியவராக இருக்க வேண்டும் என்பதை உறுதிபடுத்த நடவடிக்கை எடுக்கபபடும்.

இந்திய தரப்பினரால் கூறபபட்ட மாறறு ஆலோசனை; இலங்கை தரப்பு ஏற்றுக்கொள்ளாது.

ஒரு மாகாண சபை எல்லைக்குள் உள்ள பொலீஸ் நிலையங்களில் பணி புரியும் பொலீஸாரில் 80 சதவீதம் அந்த மாகாண சபை எல்லைக்குள் இருந்தே நிரட்டப்பட வேண்டும்.

ஒழுங்கு நடவடிக்கை

மாகாணசபை எல்லைக்குள் பணியாற்றும் பொலீஸார் எவர் மீதாவது பொதுமக்கள் முறைப்பாடு செய்தால்,

அந்த முறைப்பாடு விசாரணை செய்வதற்கு உகந்ததாகக் கருதப்படுமானால்,

அது சம்பந்தமான விசாரணைக் குழுவின் மாகாணசபை பிரதம நிறைவேற்று அதிகாரியின் பிரதிநிதி ஒருவரும் இருப்பார்.

சட்டம் பேணல், குற்றத்தடுப்பு, புலனுய்வு நடவடிக்கைகள்

பொலீஸ் மா அதிபரின் கீழ் பணியாற்றினாலும், மாகாண எல்லைக்குள் சட்டம், ஒழுங்கு பேணல் சம்பந்தமான விஷயங்களுக்கு மாகாண சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்குப் பதிலளிக்க வேண்டியவராகவே மாகாணத் தலைமைப் பொலீஸ் அதிகாரி இருப்பார். ஒரு மாகாணசபை எல்லைக்குள் அரசாங்கத்தை எதிர்த்து சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகள் இடம் பெற்றால், மாகாணத் தலைமைப் பொலீஸ் அதிகாரி பொலீஸ் மா அதிபருக்குப் பொறுப்பாக இருந்து சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவார்,

ஒரு மாகாண சபை எல்லைக்குள் சட்டம் – ஒழுங்கை மீறும் நடவடிக்கைகள் ஏற்பட்டால் பொலீஸ் மா அதிபர் விசேட அதிரடிப் படையை அனுப்பி சட்டம் ஒழுங்கு பேணல் நடவடிக்கைகளை எடுப்பர்.

அப்படியான சட்டவிரோத செயல்கள் தேசிய நலன் கருதி விசாரணை செய்யப்படவேண்டும் என்று பொலீஸ் மா அதிபர் கருதினால், மாகாண சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியின் ஆலோசனையுடன், சி.ஐ.டி. விசாரணைக்கு பொலீஸ் மா அதிபர் உத்தரவிடுவார்.

காணி உபயோகம், காணி அபிவிருத்தி சம்பந்தமான கொள்கை

1. முழு நாட்டுக்கு மான காணி அபிவிருத்தி சம்பந்தமான தேசியக் கொள்கை ஒன்று தயாரித்து அமுல் நடத்தப்படும். குடியேற்றப்படுவோர் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படுவர்.

ஒவ்வொரு பகுதிக்கும் எத்தனை பேரைக் குடியேற்றுவது, தெரிவுகள் மத்திய அரசாங்கம் தனக்கென வைத்துக் கொண்டுள்ள அதிகாரத்தின்கீழ் நடத்தும்.

2. காணி பாவனை ஆணைக்குழு ஒன்று நிறுவ எண்ணப்பட்டுள்ளது. நாடுமுழுவதிலும் இருந்து கிடைக்கும் முறைப்பாடுகளை இந்த ஆணைக்குழு பரிசீலனை செய்யும். இது மத்திய அரசாங்கத்தின் கீழ் செயல்படும்.

பொலீஸார் நாட்டின் எந்த பகுதிக்கும் இடமாற்றம்

பொலீஸார் மாகாணசபை விதிக்கும் நியந்தனைகளின் கீழ்தான் நடைபெற வேண்டும். என்ன அடிப்படையில் தெரிவுகள் நடத்தப்பட்டுள்ளன என்ற விவரங்களையும் மாகாணசபை, மாவட்டசபைகளில் இருந்து கோர மகாவலி அதிகாரசபைக்கு உரிமை உண்டு.

எந்தப்பகுதிகளில் குடியேற்றஞ்செய்வது என்பதைத் தீர்மானிக்கும் உரிமை மகாவலி அதிகாரசபைக்கு உண்டு.

காணி தேவையானமக்கள் வரிக்கும் பிரதேசங்களைமகாவலி அபிவிருத்தி அதிகாரசபைதான் தெரிவு செய்யும். நாடு முழுவதிலும் இருந்து குடியேறுபவர்கள் தெரிவு செய்யப்படுவது, தேசிய இன விகிதாசாரப்படியே இடம்பெறும்.

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டவள்ள காணிகள்:– 2லட்சத்து 76 ஆயிரத்து 219 ஏக்கர்.

கிழக்கு மாகாணத்தில் 94 ஆயிரத்து 78 ஏக்கர் கொண்டுவரப்படும்.

தமிழ்பேசும்மக்களுக்கு 69 ஆயிரத்து 55 ஏக்கர் காணி கிடைக்கும்.

ஆளுக்கு இரண்டரை ஏக்கர் வீதம் 27 ஆயிரத்து 622 காணித்துண்டுகள் தமிழ்பேசும் மக்களுக்கு வழங்கப்படும்.

கிழக்கு மாகாணத்தில் 37 ஆயிரத்து 631 ஏக்கர் உண்டு.

விவசாயத் துறை

நாடு முழுவதற்குமான தேசியக்கொள்கை ஒன்று விவசாய அபிவிருத்தி சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்டு அமுல் நடத்தப்படும்.

உற்பத்திகளின் அடிமட்டவிலை, மானியத்தரவி காப்புறுதி பிரிமியம்,உற்பத்தி இலக்குகள் தயாரித்தல், விவசாய ஆராய்ச்சி, பண்ணைகள் நிறுவுதல் ஆகியன தீர்மானிக்கக்கூடியதாக இத்தேசியக்கொள்கை அமையும்,

> **இலங்கை அரசினால், இனப்பிரச்சினை தீர்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நகல் செயல் நிட்ட யோசனைகள் இப்பொழுது வெளிவந்துள்ளன.**
>
> **இந்த யோசனைகளை, தமிழ் ஈழ விடுதலை அமைப்புக்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன கூட்டாக நிராகரித்து விட்டது குறிப்பிடத்தக்கது.**
>
> **நகல் நிட்ட யோசனைகளின் தொகுப்பு இன்றுடன் முடிவடைகிறது.**

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்ள திட்டங்களில் குடியேறுபவர்களைத் தெரிவு செய்ய மாகாணசபை, மாவட்ட சபைகளை அனுமதிக்க மகாவலி அதிகாரசபைக்கு முடியும்.

பொதுவாகக் கீழ்வரும் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும்.

(அ) மாவட்ட ரீதியான விவசாயத்திட்டம் மாவட்டமாகாணத்தில் உள்ள ஏனைய முகவர் நிலையங்களுடன் இணைப்பு உள்ளதாகத் தயாரிப்பது.

(ஆ) ஊட்டச் சத்து திட்டத்தை விஸ்தரிப்பது.

(இ) தமத்தொழில் சேவைச் சட்டத்தில் உள்ள பெரும்பாலான அதிகாரங்களைப் பிரயோகிப்பது விவசாயசேவைக் குழுக்களை மேற்பார்வை யிடுவது, விவசாய அடையாள அட்டை வழங்குவதுகாணிஇடாப்புக்கள்தயாரிப்பது.

(ஈ) நிறிய நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைப்பது, பராமரிப்பது.

(உ) சிறுதானிய உற்பத்தித்திட்டங்களை விஸ்தரிப்பது, தவியார் நாற்று மேடைகளை ஒழுங்குபடுத்துவது, விவசாயம் சம்பந்தப்பட்ட தொழில்களை நிறுவுவது.

கைத்தொழில்

1. கைத்தொழில் அபிவிருத்தி சம்பந்தமாக தேசியக் கொள்கை ஒன்றைத் தயாரித்து, நடைமுறைப்படுத்துவது மத்திய அரசின் கொள்கை.

2. இதற்குக் கட்டுப்பாடாக, மாகாணசபைகள் தங்கள் எல்லைகளுக்குள் கைத்தொழில்களை நிறுவ, முன்னேற்றுவிக்க அதிகாரம் உண்டு.

3. கடனுதவி பெறுவது சம்பந்தமான கைத்தொழில் திட்டங்களை நடைமுறைப்படுத்த அமைச்சின் அங்கீகாரத்தை மாகாணசபை பெறவேண்டும்.

சகல அபிவிருத்திகளையும் ஒரு நிலைபடுத்த திட்டமிட்ட முறையில் அபிவிருத்திகளை மேற்கொள்ள, தேசிய வளங்களைப் பாவிக்கக் கூடியதாக மத்திய அரசாங்கம் சில கட்டுப்பாடுகளை விதிக்கும்.

அதன்படி கைத்தொழில்களைப் பதிவு செய்தல், தேவையான தகவல்கள் — புள்ளிவிவரங்களைக் கோரல், சம்பளம்-விலை நிர்ணயித்தல் ஆகிய சம்பந்தமான அதிகாரங்கள் மத்திய அரசிடம் இருக்கும்.

4. தற்போது இயங்கிவரும் அரசாங்க ஆதரவிலான கைத் தொழில்களை மாகாண சபைகளிடம் ஒப்படைப்பது பற்றி ஆலோசிக்கப்படவில்லை.

கல்வி

அதிகாரப் பரவலாக்கலின் மேழ், கலாசாரத் துறை, கல்வித்துறையில் செக்கன்டரி லெவல் வரையிலான கல்வி வளர்ச்சி ஆகியனகுறிந்து குறிப்பிடத்தக்க அளவு

(4.ஆம் பக்கம் பார்க்க)

சிறுவர் இலக்கியத்தில் திறனுய்வுக் குறைபாடு

விமர்சன அரங்கில் கருத்து

யாழ்ப்பாணம், டிச 9

தமிழ்மொழியில் சிறுவர் இலக்கியம்பற்றி கர்மனமான நுண்ணிய, காத்திரமான இலக்கியத் திறனுய்வு இல்லை. இது ஒரு பெரும் குறைபாடு.

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் பாலர்பா அமுதம் நூல் விமர்சன அரங்கு இடம்பெற்றது. நல்லூர் வட்டாரக் கல்வி அலுவலர் திரு. க. விநாயகமூர்த்தி தலைமை வகித்தார்.

அரங்கில் உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் திரு. எஸ் சிவலிங்கராசா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

தமிழ் இலக்கியத்தில் தொல்காப்பியத்தில் சிறுவர் இலக்கியம் பேசப்படுகிறது.

பொருள் அதிகாரத்தில் காணப்படும் இத்தகவலுக்குப் பேராசிரியர் எழுதிய உரையில் விளக்கம் உண்டு. ஔவை பாடலிலும் உண்டு. வாய்மொழிப் பாரம்பரியம்மூலம் குழந்தை இலக்கியம் பேணப்படுகிறது.

எனினும் முறையான கூரிய திறனுய்வு குழந்தை இலக்கியம் பற்றி மேற்கொள்ளப்படவில்லை. பேராசிரியர் கைலாசபதி தனது பங்கினை அளித்திருக்கிறார். இக்குறைபாடு நிலவுவதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு.

குழந்தைப் பருவம் எதுவென்று நிர்ணயிப்பதில் இலக்கியத் திறனுய்வாளர்களுக்குச் சிக்கல் உண்டு.

ஒரு தாய்க்கு முதுமை அடைந்த மகனும் குழந்தையே: அதேபோன்று இன்னொரு பிரச்சினையும் இலக்கிய ஆய்வாளர்களுக்கு உண்டு. அது பாடல் சம்பந்தமானது.

எது செய்யுள், எது கவிதை, எது பாட்டு என்று நிட்டவட்டமாகப் பகுப்பதும் இலக்கியத் திறனுய்வாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை ஆகும். இதனும் குழந்தை இலக்கியம்பற்றிய காத்திரமான திறனுய்வு மேற்கொள்ளப் படாமைக்குக் காரணம்.

இவ்வாறு தனதுரையில் திரு.சிவலிங்கராசா கூறினார்.

புனர்வாழ்வு அமைச்சு செயலாளர் வவுனியா வருவார்

குறைபாடுகளை நேரில் அவதானிக்க

வவுனியா டிச. 9

வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுகள் பற்றி நேரில் கண்டுஅறிய புனர்வாழ்வு அமைச்சு செயலாளர் அட்மிரல் ஏ.டபிள்யு.எச். பெரேரா வவுனியாவிற்கு விஜயம் செய்ய இருக்கின்றார்.

வவுனியா மாவட்டத்தில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஏன் திருப்திகரமாகச் செயற்படவில்லை என்று அமைச்சுச் செயலாளர் பிரஜைகள் குழுத் தலைவரைக் கேட்டு

(4.ஆம் பக்கம் பார்க்க)

விந்தாரம்

என்ன முரளி, மெத்தக் கவலையாய் இருக்கிறமாதிரித் தெரியுது.

ஏன் என்ன சங்கதி?

அட இந்த நாளைப் பெடியன் பெட்டையளுக்கு ரி. வி, வீடியோ தான்உயிர். சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை என்டால் அதுக்குப் பக்கத்திலதான் படுக்கிறான். சாப்பாடு இல்லாட்டாலும் பறவாயில்லை. வீடியோ படம் பார்த்தால் பசி போயிடும் அதுகளுக்கு. நீயும் அந்தக் கூட்டத்திலை ஒருகுரு வந்திட்டாயாக்கும்.

பின்னை என்ன "கறன்ட்" இல்லை. அதால வீடியோ பாக்க முடியவில்லை எண்டு கவலைப்படுறதே. இண்டைக்கு இல்லாட்டால் நாளைக்கும் பாக்கலாம் தானே.

அது சரி உந்தக் "கறன்ட்" ஏன் அடிக்டிசேட்டை விடுது? தான் நினைச்சா நினைச்சாப்போலை இடுது என்டு நிண்டு போகுது. இரவிலைபல்புகள்மினுங்கி மினுங்கி எரியுது. உந்த "எலக்றிற்றி" டிப்பாட்மென்ட்காரர் என்ன செய்யினமோ!

அவையையும் ஒரேயடியாகக் குறை சொல்ல ஏலாது. இந்தனை வீட்டுக்கு, இந்தனைபக்டரிக்கு இந்தனை அளவு மின்சாரம் தான் கொடுக்க முடியும் என்டு கணக்கு வழக்குப் பார்த்துத் தான் "சப்ளை" கொடுக்கினம் எங்கடைசனம் என்னடா வென்டால் 'போஸ்ட்' வயரில இருந்து சுகமா எடுத்து இலவசமாலையிட் எரிக்குதுகள். அது மட்டுமே, ஒரிக் கறண்டிலை ஜாலியா வீடியோ பாக்கினம்.

அடுப்படியிலும் நெருப்பில்லாமல் புகையில்லாமல் சமைக்கப் போட்டு அதிகம் மிஸ்கெடொமல் குசினியுக்கிளாலை வந்திடுகினம். "ஓவ்"லில நஞ்சை குடுத்தாலும் வாங்கிக் குடிச்சுப்போட்டுச் சாகிறதுக்குத் தயாராய் இருக்கினம் சில பேர். இந்தக் கள்ளக் கறண்ட் எடுக்கிறதுக்கு அவை பின்னுக்கு நிற்பினமே!

இளைகள் தான் சுகாமல் போஸ்டிலை வயரைக் கொழுவி கறண்ட் எடுக்குதுகள் என்டா ஐம்பது தாண்டினபெண்டுகள் கூட வயர் கொழுவினம் எண்டால் பாருங்கோவேன். ஆட்டுக்குக் குழை ஒடிக்கிறதுபோலை சத்தம் தடியைப் பிடிச்சவயர் கொழுவுகினம்.

காசு கொடுத்து கறண்ட் எடுக்கிறவையின்ட வீடுகளிலைமங்கல் வெளிச்சம் எண்டால் தங்களுக்கு என்ன நட்டம் எண்ட நினைப்பு.

உந்தக் கறண்ட் எண்ட மின்சாரம் எவ்வளவு ஆபத்து எண்டதையும் யோசிக்கிதுகள் இல்லை. கள்ளக் கறண்ட் எடுத்து எத்தனை பேர் செத்துப் போச்சினம். அப்பிடி இருந்தும் - ஒரு எண்ணம் எரிகிறதை இருக்கே இதுகளுக்கு.

எப்பிடிச் சொன்னாலும் கேட்கினதுகள்.

நேற்றைக்கு பெடியன் ஒரு பேர் வந்து கோப்பாய் பக்கத்திலை கள்ளக் கறண்ட் எடுக்கிறவையின்டை வயர் எல்லாத்தையும் கழட்டி எரிச்சுப் போட்டினம் எண்டு கேள்வி.

கொஞ்ச நாளைக்கு முந்தி அந்தப் பக்கத்திலை, கள்ளக்கறண்ட் எடுக்க வேண்டாம் எண்டு ஒளிபெருக்கியிலை கூட பணிவாக் கேட்டுப்பாத்தவை எண்டும் ஒரு ஞாபகம்.

கொண்டாடி

பொய்யாமொழி

விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து உள்நின்று உடற்றும் பசி.

மழை பெய்யாமல் பொய்யுமானால், கடல் சூழ்ந்த அகன்ற உலகமாக இருந்தும் பசி உள்ளே நின்றுது நின்று உயிர்களை வருத்தும்.

DIA
Dia, Dia, Dia, Dia
Dia For Electronics ! Watches!
Any Work in Electronics Visit Dia
No. 6, Jubilee Bazar,
(BESIDE RANEE CINEMA)
JAFFNA.

உதயன்
9 - 12 - 1985

டயா
டயா; டயா; டயா; டயா;
எல்லிதமான எலக்ரோனிக்
வேலைகட்கும் நாடுங்கள்
டயா வோச் வேக்ஸ்
No.6,புபிலி பஸார் (ராணி சினிமா அருகில்)
யாழ்ப்பாணம்.

உயர்தர பரீட்சை முடிவுகள் ஏமாற்றம் தருகின்றன

அதிருப்தி தெரிவிக்கிறார் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிச 9
இவ்வருட ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் திருப்தியாக இல்லை. தனியே பரீட்சை மூலம் மாணவரின் திறமையை அளவிட முடியாது. எவினும் எமது நாட்டின் அளவு கோல் பரீட்சையே.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். டி.யிராம்பிள்ளை மேற்கண்டவாறு சொன்னார்.

வலய விஞ்ஞான ஆலோசகர்களுக்கான கருத்தரங்கு டிசம்பர் 2 ஆம் திகதி ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைந்தது.

இறுதி நாள் நிகழ்ச்சியில் கல்விப் பணிப்பாளர் திரு. சிமியாம்பிள்ளை கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

அவர் மேலும் சொன்னதாவது:

ஒரு சமூகத்தின் எதிர்காலம் கல்வி நிலையில் இருக்கிறது.

ஆசிரியர்கள் தங்களைக் கல்வித்துறையில் அர்ப்பணிக்க வேண்டும். இந்த எண்ணம் அவர்களின் உள்ளத்தில் இருந்து எழ வேண்டும்.

இக்கால கட்டத்தில் மாவட்ட மாகாணங்களின் கல்வித்தரம் உயர விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்கள் எடுக்கும் முயற்சி எமது இனத்துக்குச் செய்யும் முக்கிய பணியாகும்.

இப்படி திரு சிமியாம்பிள்ளை சொன்னார்.

கிரேஷ்ட விஞ்ஞான ஆலோசகர் திரு. சி. அம்பிகாவரன் பேசுகையில், விஞ்ஞானக் கல்வியின் வளர்ச்சி தான் மானவரிடையே ஆராய்ந்து அறியும் எண்ணத்தையும் தீர்வு காணும் மனப்பாங்கையும் வளர்க்கின்றது. இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞானக் கல்விதான் தேவைப்படுகின்றது'' — என்று சொன்னார்.

கல்வி அதிகாரி திரு. கே. சோமசுந்தரம் தலைமை வகித்தார். விஞ்ஞான வட்டாரக்கல்வி அதிகாரிகளான திரு சி. செல்லத்துரை, திரு. எஸ். நடராசா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

மீண்டும் கொள்ளை

யாழ்ப்பாணம், டிச, 9
வீடியோ பிரசாத் நிறுவனத்தில் மீண்டும் கொள்ளை இடம் பெற்றது.

ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு டெக்குகள், 840 கஸெட்டுகள் இம்முறை கொள்ளை இடம்பட்டன.

இனந்தெரியாதவர்கள் கதவை உடைத்து உள்ளே புகுந்து கொள்ளையை நடத்தினர் என்று கூறப்படுகின்றது.

நவம்பர் 27ஆம் திகதி நடைபெற்ற இச் சம்பவம் தொடர்பாக நேற்று (ஞாயிறு) யாழ் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இன்று

சாவகச்சேரி, டிச 9
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் புற்றுநோய் அறிகுறி உள்ளோர் பற்றி அறிந்து கொள்வதற்கான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

இது தொடர்பாக ஆரம்ப சுகாதார கண்காணிப்புக் குழுவினருக்கும் தொண்டர்களுக்கும் இன்று 9 ஆம் திகதி சாவகச்சேரி நகர சபையில் பயிற்சி அளிக்கப்படும்.

விளையாட்டரங்கு

7 பேர் கொண்ட உதைபந்தாட்டம்

சென்.அன்ரனிஸ் வெற்றி

ஈற்றுப்போட்டியில் புதிய திருப்பம்

—விளையாட்டுச் செய்தியாளர்:- சண். ஜோன்சன் —

நேற்று நடைபெற்ற உதைபந்தாட்ட மோதலில் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் யாழ் முஸ்லீம் விளையாட்டுக் கழகத்தை 5க்கு 0 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

யாழ் உதைபந்தாட்டலீக் நடத்தும் 7பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் ஒரு அங்கமாகவே இப்போட்டி நடைபெற்றது.

சுற்றுப் போட்டிகள் நிறுவிறுப்படைந்திருக்கும் இக்கட்டத்தில் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் வெற்றி சுற்றுப்போட்டியில் பெரிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்தி இருக்கின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் முன்னர் நடைபெற்ற ஆட்டங்களில் இந்துக் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகம் 5 புள்ளிகளையும் ஒறீன் பீல்ட் விளையாட்டுக்கழகம் 5 புள்ளிகளையும் பெற்று முன்னணியில் நிற்கின்றன.

எனினும் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் 5புள்ளிகளையும் பெற்று மொத்தமாக 5புள்ளிகளைப் பெற்றிருக்கின்றது. இவ்வணி இன்னுமொரு போட்டியில் மோதவிருக்கிறது. அது கொக்குவில் பொற்பதிக்கு எதிரான போட்டியாகும்.

நடைபெற விருக்கும் இப்போட்டியில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெறுமானால், கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகம் ஒறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம், சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் ஆகிய மூன்று அணிகளும் மீண்டும் ஒரு சுற்று ஆட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலைக்கு தள்ளப்படும்.

நேற்று நடைபெற்ற 'பி' பிரிவு ஆட்டத்தில் அரியாலை (ஏ) அணியை எதிர்த்து அல்லிப்பிட்டி அணி விளையாடியது இதில் அரியாலை (ஏ) அணி 1க்கு 0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

நடை பெறவிருக்கும் மற்றொரு போட்டியில் வைக்கிங்ஸ் அணி மைதானத்துக்கு சமுகம் அளிக்காததனால், அரியாலை (பி) அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

நேற்று நடை பெற்ற போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக முறையே ஏ. தேவராஜா எம், தேவதாஸ் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

இப் போட்டிகள் யாவும் அரியாலை சன சமூக நிலைய மைதானத்தில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது

சிமெந்து கூட்டுத்தாபனம் தொடர்ந்து வெற்றி

காங்கேசன்துறை டிச, 9
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன பணியாளர் அணி அண்மையில் நடைபெற்ற இரண்டு வலைபந்தாட்டப் போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கிறது.

நடேஸ்வராக் கல்லூரி அணிக்கு எதிரான ஆட்டத்தில் 9—6 என்ற புள்ளி அடிப்படையில் கூட்டுத்தாபனஅணி வென்றது.

இந்த ஆட்டம் கூட்டுத்தாபன ஆடுகளத்தில் நடந்தது.

லங்கா சிமெந்து விமிடெட் பணியாளர் அணிக்கு எதிரான மற்றைய ஆட்டத்திலும் கூட்டுத்தாபன அணி 14 அதிகபுள்ளிகளினால் வெற்றிபெற்றது. 19—5 என்ற புள்ளி அடிப்படையில் லங்கா சிமெந்து மண் கவ்வியது.

ரூபவாகினியில் புனர்ஜென்மம்

யாழ்ப்பாணம் டிச 9.
ரூபவாகினியில் டிசம்பர் 11 ஆம் திகதி புதன் கிழமை புனர்ஜென்மம் தமிழ் திரைப் படம் ஒளிபரப்பப் படவிருக்கின்றது

சிவாஜிகணேசன் பத்மினி டூ படத்தில் நடிக்கின்றனர்.

அல்லிப்பிட்டியில் சமாதான சபை

திருநெல்வேலி, டிச. 9
அல்லிப்பிட்டியில் சமாதானசபை ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

சபையின் தலைவராக திரு எஸ். சச்சிதானந்தனும் செயலாளராக திரு. செ. புண்ணியமூர்த்தியும் தெரிவு செய்யப்பட்டனர்.

புனர்வாழ்வு...

(3ஆம்பக்க தொடர்ச்சி)

இருக்கார்.

வவுனியாவில் இருந்து 12, 500 பேர் வரையில் அகதிகளாக யாழ்ப்பாணம், அனுராதபுரம், மன்னார் பகுதிகளுக்குச் சென்றுவிட்டனர்.

ஆயுதப்படையினர் நடைபவனியாக வந்து தேடுதலில் ஈடுபடுவதால் அகதிகள் மீண்டும் பழைய இடங்களில் குடியமரும் சாத்தியக் கூறுகள் தென்படுவதாக இல்லை என்று வவுனியா பிரதேசக் குழுத் தலைவர் திரு. எஸ். வி. பராராஜசிங்கம், புனர்வாழ்வு அமைச்சுக்கு அறிவித்து இருந்தார்.

இதைத் தொடர்ந்தே நேரில் குறைகளைக் கண்டறிய அமைச்சுச் செயலாளர் வவுனியாவிற்கு விஜயம் செய்ய இருப்பதாக அறியப்படுகின்றது.

டாக்காவில் பொலீஸ் நிலையம் மீது தாக்குதல்

டாக்கா, டிச. 8
ஏழு ரைபிள்களை கோஷ்டியினர் பொலீஸ் நிலையத்தில் இருந்து கொள்ளை அடிக்கினர்.

பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் இருந்து 60 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பொலீஸ் நிலையம் சனிக்கிழமை நள்ளிரவு தாக்கப்பட்டது.

பங்களாதேஷ் இடதுசாரிக் கோஷ்டியினர் இத்தாக்குதலை நடத்தியதாகக் கூறப் படுகின்றது.

முப்பதுபேர் கொண்ட கோஷ்டியே தாக்குதலை நடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது அச்சமயம் 20 பொலீஸார் பொலீஸ் நிலையத்தில் கடமையில் இருந்தார்கள். ஒரு பொலீஸ் அதிகாரி காயமடைந்தார்.

வெளியார் வந்து தலையிட அனுமதியாதீர்

ஊர்காவல் படையினருக்கு புத்திமதி

யாழ்ப்பாணம், டிச. 9
ஊர்காவல் படையினர் தமது பகுதிகளில் வெளியார் தலையிடுவதற்கு இடமளிக்கக் கூடாது.

இப்படி தேயிய பந்தோபஸ்து அமைச்சரும் பதில் பாதுகாப்பு அமைச்சருமான திரு. லலித் அத்துலத்முதலி கூறினார்.

மின்னேரியாவில் பயிற்சிமுடிந்து வெளியேறும் ஊர்காவல் படையினர் மத்தியில் பேசுகையிலேயே அமைச்சர் இதனை வெளியிட்டார்.

கிராமங்களில் சமாதானத்தை நிலைநாட்டும் பொறுப்பு, ஊர்காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் சொன்னார்.

தேவை ஏற்ப...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும்.

அரச உதவியின்றி தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவி, நிர்வகிக்கும் அதிகாரமும் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும்.

சல்வி பற்றிய அதிகாரம் பரவலாக்கல் குறித்து விரிவான முறையில் யோசனைகள் அடங்கிய அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. பின்னர் அது பற்றி ஆலோசிக்கப்படலாம்.

தேசியக் கல்விக் கொள்கை பாரபட்சமற்றதாக இருக்கும்.

கலாசாரம்

கலாசார நடவடிக்கைகளை நடத்துவது, வளர்ப்பது ஆகிய அதிகாரங்கள் மாகாண சபைகளிடம் வழங்கப்படும்.

நிதி உதவியை மத்திய அரசு வழங்கினால் மட்டுமே மத்திய அரசு மேற்பார்வையிடும், கட்டுப்படுத்தும்.

சம் நிதப்பட்ட பிரதேசங்களில் கலாசார நடவடிக்கைகளை ஒருங்கு இணைக்க மாகாணசபைகள் பிரதேச சபைகளுக்கு உதவும்.

கலை, நாடகம், சங்கீதம், நடனம், இலக்கியவளர்ச்சி, மற்றும் பிறர்களை நடத்த உதவுதல் ஆகியன சம்பந்தமான அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்படும்.

10 லட்சம் சிறுவர்கள் அடிமைகள்

கொழும்பு டிச. 9
இலங்கையில் 10 லட்சம் சிறுவர்கள் அடிமைகளாக உள்ளார்கள் என்று லண்டன் 'டெயிலி எக்ஸ்பிரஸ்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியை இலங்கை அரசு முற்றாக மறுத்து உள்ளது.

மனித உரிமைகள் தினக் கருத்தரங்கும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், டிச 9
மனித உரிமைகள் தினத்தை ஒட்டிய கருத்தரங்கும் கண்காட்சியும் யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அருட்திரு ஜெயசீலன் அடிகளார் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறும்.

கண்காணிப்புக் குழு உறுப்பினர் பேராசிரியர் கா. சிவத்தம்பி, சுந்தரசெல்வா அறங்காவல் குழுத் தலைவர் பேராசிரியர் கு. நேசையா ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

இனங்களிடையே நிதிக்கும் சமத்துவத்துக்கான இயக்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

திருப்பதி வெங்கடேசருக்கு வைரக் கிரீடம்

திருப்பதி வெங்கடேஸ்வரப் பெருமானுக்கு டிசம்பர் 20-ம் திகதி வைரக் கிரீடம் சூட்டப்படவிருக்கின்றது.

வைரக் கிரீடம் தயாரிக்கும் பணி விறுவிறுப்பாக நடைபெறுகின்றது. இதற்கான தனி வேலைத்தளம் ஒன்றை திருப்பதி-திருமலை தேவஸ்தானம் அமைத்துள்ளது.

30 நிபுணத்துவம் பெற்ற பொற்கொல்லர்கள் நிலமும் 13 மணி நேரம் வேலை செய்கின்றனர்.

தேவஸ்தானத்தில் இருக்கும் வைரங்களையே பாவித்து, இக் கிரீடத்தைச் செய்ய தேவஸ்தானம் முடிவு செய்துள்ளது.

பெங்களூர் பொற்கொல்லர்கள் பணம் பெறாது இலவசமாக இந்த வைரக் கிரீடத்தைச் செய்கின்றனர்.

வைரக் கிரீடம் சூட்டும் வைபவத்தில் ஆயிரம் முதல் அமைச்சர் திரு. என். டி. ராமராவ் கலந்து கொள்வார்.

தமிழ்நாட்டில் 300 தியாகிகள் கௌரவிக்கப்பட்டனர்

சென்னை, டிச8
கரங்களில் நூற்றுண்டு விழாவில் 300 தியாகிகள் கௌரவிக்கப் பட்டனர்.

சென்னை காங்கிரஸ் திடலில் இந்த நிகழ்ச்சி இடம் பெற்றது.

நூற்றுண்டு விழாக் குழுத் தலைவர் திருகே. பி. ராமச்சந்திரன் தியாகிகளுக்கு கேடயம் வழங்கினர்.

காங்கிரஸ் மாநிலத் தலைவர் எம். பழனியாண்டி சால்வை போர்த்துத் தியாகிகளைக் கௌரவித்தார்.

முன்னாள் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் முன்னாள் அமைச்சர் சி. சுப்பிரமணியம், ஜனிவாசக அய்யங்கார் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய நடிகர் திலகம் வொழி சுவேசன்(ராஜ்ய சபா எம். பி.) பேசுகையில், நாடு முன்னேற அனைவரும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாடு சட்டசபை இந்திரா காங்கிரஸ் குழுத் தலைவர் திரு. எம் பி. சுப்பிரமணியம் பேசுகையில் 21 ஆம் நூற்றாண்டை நோக்கி நாடு பீடு நடை போட அனைவரும் பிரதமரின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கொண்டாடியது

பருத்தித்துறையிலுள்ள மந்திகை பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா சமிதி, பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 60ஆவது பிறந்தநாள் விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடியது.

இதில் அரியாலை (ஏ) அணி 1க்கு 0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

நடை பெறவிருக்கும் மற்றொரு போட்டியில் வைக்கிங்ஸ் அணி மைதானத்துக்கு சமுகம் அளிக்காததனால், அரியாலை (பி) அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது,

நேற்று நடை பெற்ற போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக முறையே ஏ. தேவராஜா எம், தேவதாஸ் ஆகியோர் கடமையாற்றினர்கள்.

இப் போட்டிகள் யாவும் அரியாலை சன சமூக நிலைய மைதானத்தில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது

வால் நட்சத்திரம் விலகிச் செல்கிறது

யாழ்ப்பாணம், டிச. 9
ஹேலீஸ் வால் நட்சத்திரம் மீண்டும் பூமியை விட்டு விலகிச் செல்கின்றது.

கூடந்த மூன்று வாரங்களாக தொலைநோக்கி மூலமாகவும் பைனாகுலர் மூலமாகவும் காணக்கூடியதாக இருந்த ஹேலீஸ் வால் நட்சத்திரத்தை இப்பொழுது பார்க்க முடியாது உள்ளதாக, இலங்கையின் பிரபல வானசாஸ்திர நிபுணர் அனுராசி. பெரேரா தெரிவித்துள்ளார்.

நவம்பர் 27ஆம் திகதி பூமியில் இருந்து 9கோடி 30லட்சம் கிலோ மீற்றர் தூரத்தில் ஹேலீஸ் காணப்பட்டது.

மீண்டும் இவ்வால் நட்சத்திரம் 1986 ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில்தான் மனிதனின் சாதாரண கண்களுக்குத் தென்படும்.

அதுவும் அதிகாலையில் தான் தென்படும் — இப் அனுராசி. பெரேரா சொன்னார்.

இஸ்ரவேல் போய் வந்தவர்களில் மூவர் இடது கை இழந்தவர்கள்

யாழ்ப்பாணம், டிச. 9
வைத்திய சிகிச்சை பெற்ற பின்னர் இஸ்ரவேலில் இருந்து திரும்பிய 10 இராணுவ வீரர்களில் நால்வருக்கு பிளாஸ்டிக் கைகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த நால்வரும் தங்கள் இடது கைகளை இழந்திருந்தனர்.

பதவியா, அனுராதபுரம் பகுதிகளில் போராளிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் இடது கைகளை இழந்த மூன்று பாதுகாப்புப் படை வீரர்களும்:—

காரை நகர் கடற்படைத் தாக்கு தலில் இடது கையை இழந்த லெப்டினன்ட் ஏ. பெரேரா (வயது 37)வும் அடங்குகின்றனர்.

இவர்கள் நவம்பர் 15 இல் இஸ்ரவேல் சென்றனர்; டெல்அவிவ் இராணுவ ஆஸ்பத்திரியில் 21 தினங்கள்சிகிச்சைபெற்ற பின்னரே நாடு திரும்பினர்.

இடது கைகளை இழந்த 3 பாதுகாப்புப் படை வீரர்களின் பெயர்கள் வருமாறு:—

சார்ஜண்ட் கே. தயாரத்ன (வயது 30), கொரமாண்டோ பொலீசைச் சேர்ந்த சுகந்த ஆராச்சி, இராணுவ வீரர் மித்திரானந்த (வயது 25),

வில்பத்து காட்டில் போராளிகளைத் தேடி பாதுகாப்புப் படையினர் ஹெலிக்கொப்டர் மூலம் தேடுதல் நடத்தியபோது சார்ஜண்ட் தயாரத்ன துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகியமடைந்தார்.

ரூபவாகினி

9 - 12 - 85

5 – 00 - செய்திகள்
5 - 05 – ஹிமான்
5 - 30 – வாட்டர்வில் காங்
6 – 00 –சிந்துயி பிந்துயி (குழந்தைகள் நகைச்சுவை)
6 – 30 – செய்திகள் (தமிழ்)
6 – 55 – விவசாயம்
7 – 15 – பொதுத் பிரசுரம்
7 – 25 – விவரணச் சித்திரம் டாக்டர் வெஸ்ரர் ஜேம்ஸ் பிரில்
8 – 00 – செய்திகள் விங்கமம்
8 – 20 – விவரணம்
9 00 – செய்திகள் ஆங்கிலம்
9 – 20 – வெஸ்டர்: நகைச்சுவை
9 – 50 – விஞ்ஞானக் கற்பனைத் தொடர்
10 – 40 – ஒளிபரப்பு முடிவு

அமெரிக்கா செல்ல வேண்டுமா?
அமெரிக்கா செல்வதற்கான சூறிஸ்ட் விசா (TOURIST VISA) மல்றிபிள் விசா (MULTIPLE VISA) மற்றும் பிரயாணச் சீட்டுக்களுக்கும், பாஸ்போர்ட், பொண்ட், உடன் இந்தியா செல்வதற்கான விசாவும் பெற்றுத்தர இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.
"RAJEEVAN TRAVELS"
42, மணிக்கூட்டு வீதி
(குணம் வீடியோ வொர்ர் முன்பாக)
யாழ்ப்பாணம்

பல அம்சங்களினதும்
பல்சுவை ததும்பும்
குடும்ப வார இதழ்
சஞ்சீவி
உயிர் காக்கும் மருந்தேபோல்
அறிவுக்கு உரமூட்டும்
கருத்தோவியக் குவியல்
* * *
முற்றிலும் புதிய பாங்கில்
புதுமைப் படைப்பு-
உதயனின் வார இதழ்
சஞ்சீவி
விரைவில் மலரும்.

பெற்றோர்களே!
திருமண வயதிலிருக்கும் உங்கள் பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்வை உங்கள் மனத்திருப்திக்கேற்ற விதத்தில் தேர்ந்தெடுக்க இன்றே விஜயம் செய்யுங்கள்
"சமுத்ரா மஸ்ரி சேவிசஸ்"
இல: 303, பலாலி றோட்,
கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்.
அல்லது
எமது கிளை நிறுவனம்:-
முருகமூர்த்தி லேன்,
கரவெட்டி,
நெல்லியடி.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த-ஏபரு உமா எக்ஸ்போர்ட் லிமிட்டெட், 207 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 3-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி: 9-12-1985